

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.மோகன் அவர்களின் மறைவையொட்டி அவரது இல்லத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த இரா.மோகன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பொங்கலூர் நா. பழனிச்சாமி, முன்னாள் மத்திய அமைச்சர் மு.கண்ணப்பன், மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாவட்ட துணைச்செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், முன்னாள் மாவட்டச் செயலாளர் முத்துசாமி, வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி,நாச்சிமுத்து முருகவேல்,தமிழ்செல்வன், பகுதிக்கழக செயலாளர்கள் சேக் அப்துல்லா, பசுபதி, கார்த்திக்செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சோமு என்கிற சந்தோஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் முமச முருகன், ரகு துரைராஜ் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

## சட்டப்பேரவையில் முதல்வர் பதில்... முதல் பக்கத் தொடர்ச்சி

என்னவென்றால், திறப்பதற்கான அனுமதியை யாரிடம் சென்று வாங்குவது என்பதில் பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை வெளிப்படையாக நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கே தெரியும். அனுமதி வாங்க முடியாத காரணத்தினால், அதை யார் சொல்வது என்பது தெரியாமல் இருந்த காரணத்தினால், வேறு வழியில்லாமல் அதிகாரிகள் திறந்துவிட்டிருக்கிறார்கள். இதுதான் உண்மை.

**எடப்பாடி கே. பழனிசாமி:** செம்பரம்பாக்கம் ஏரி குடிநீருக்காக கட்டப்பட்ட ஏரி. அதில் திறக்கப்படுகின்ற அளவு 29 ஆயிரம் கனஅடிக்குமேல் திறக்க முடியாது. அப்படி திறக்கின்றபொழுது, ஒரு இலட்சம் கனஅடி நீர் செல்லக் கூடிய, நீர் வழிப்பாதை அடையாற்றில் இருக்கிறது. அந்த 29 ஆயிரம் கன அடி வருகின்றபோது எப்படி பாதிக்கும்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எவ்வளவு அடி என்பதெல்லாம் கணக்கல்ல. சொல்லாமல் திறந்துவிட்டது தான் குறை. அதுதான் பிரச்சினை. அதற்கு பதில் சொல்லாமல் வளைத்து, வளைத்து அதையே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். வாழைப்பழம் கதை மாதிரி நீங்கள் இதைப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இதுதான் உண்மை.

Auditing reportல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். செம்பரம்பாக்கம் ஏரியை, சொல்லாமல், யாருக்கும் தெரிவிக்காமல் திறந்துவிட்ட காரணத்தினால் பாதிப்பு ஏற்பட்டது என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். நானாகச் சொல்லவில்லை. அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விளக்கமளித்து உரையாற்றினார்.

### அரசின் மீது நம்பிக்கை வைத்து இன்றைக்கு

# அரசுப் பள்ளிகளில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

### பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதில்!

சென்னை, டிச. 11 -

சட்டப் பேரவையில் உறுப்பினரின் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அரசின் மீது நம்பிக்கை வைத்து இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள் ளார்.



இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், மாக்கிளாம்பட்டி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களை வணங்கி, தங்களது அனுமதியோடு பதில் அளிக்கிறேன்.

உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி ஒன்றியம், மாக்கிளாம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 267 மாணவர்கள் படிக்கக் கூடிய பள்ளி. 14 ஆசியர்கள் உள்ளனர். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, 6 வகுப்பறைகள், 6 கழிவறைகள் ஒரு ஆய்வுக்கூடம் 500 மீட்டருக்கான சுற்றுச்சுவர் என்று ஏறத்தாழ 2.33 கோடி ரூபாய்க்கான அரசாணை ஏற்கெனவே வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றது. பொதுப் பணித் துறையின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டவுடன், உடனடியாக அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, இந்தக் கல்வியாண்டிலே அது பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், மாக்கிளாம்படி ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டுவதில் ஏற்கெனவே, அந்தப் பள்ளியில் இரண்டு, மூன்று மரங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. அந்த மரங்களை எடுப்பதிலே பொதுப்ப்பணித் துறை காலதாமதம் செய்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி இந்த பொதுப் பணித் துறையினரோடு அரசு அதிகாரிகளை அனுப்பி வைத்து, அந்த மரங்களை எடுத்தால் உடனடியாக பணிகளைத் துவங்கு வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை செய்து தருவாரா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** ஏற்கெனவே சொன்னதுபோல், இதை பொதுப் பணித் துறையின் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, எவ்வளவு வேகமாக, விரைவாக அந்தப் பணியை செய்ய முடியுமோ, ஏனென்றால், தரமுயர்த்துவது என்று பார்த்தால், 2014-2015 அதே வளாகத்தில் தரமுயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், அதற்கான infrastructeஐ நாம் கொடுக்காமல் விட்டுவிட்டோம். அதற்கான இந்தப் பணிகளை ஏற்கெனவே சொன்னது போல், 2.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததோடு மட்டுமல்லாமல், அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு தடையாக இருக்கின்ற நீங்கள் சொன்னமாதிரி, அந்த மரத்தை அகற்றுவதாக இருந்தாலும் சரி, அதையெல்லாம் பொதுப் பணித் துறையின் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, உடனடியாக அந்தப் பணிகள் மேற்கொள் ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், சமத்தூர் பேரூராட்சி, உயர்நிலைப் பள்ளியில் 500க்கும் மேற்பட்டவர்கள் படிக்கின்றார்கள். மாணவ, மாணவி கள் வகுப்பறைகள் குறைவாக இருக்கின்றது. அதிகளவில் மாணவ, மாணவிகள் வந்து செல்கின்றார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள், உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், சமத்தூரிலே புதிதாக ஒரு கட்டடம் கட்ட முன்வருவாரா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டபிறகு, அரசுப் பள்ளிகளின் மீது அதிகப்படியான நம்பிக்கை வைத்து, இன்றைக்கு சேரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதே எங்களுக்கான ஒரு பெருமைதான். அதேநேரத்தில் அதற்குத் தேவையான அந்த infrastructure வகுப்பறைகள் அதிகம் தேவைப்படுகிறது என்று சொல்லும்போது, அதற்கு ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு பள்ளி வளர்ச்சிக்கென்று ஏறத்தாழ இதுவரைக்கும் எந்தவொரு அரசாங்கத்திலும் இல்லாத ஓர் அறிவிப்பாக 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்' என்ற மாபெரும் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இலக்கை பார்த்தீர்களென்றால், இந்த ஐந்தாண்டுகளில் 2022 ஆண்டில் நாம் அறிவித்திருக்கின்ற குறைந்த பட்சம் 18,000 வகுப்பறைகளாவது கட்டிமுடித்திட வேண்டுமென்ற அந்தப் பணியில் இதுவரைக்கும் 2,497 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கல்வியாண்டில் தனியாக ஒரு ஆயிரம் கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்திருக்கிறார். Over all report நீங்கள் பார்த்துர்களென்றால், திட்டத்தினுடைய மொத்த மதிப்பீடு 7,500 கோடி ரூபாய் இதுவரை ஒதுக்கீடு நிதி 2,497 இந்தக் கல்வியாண்டில் ஆயிரம் என்று 3,497 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. பணிகள் நிறைவடைந்து முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்ட கட்டடங்களின் விவரம் வகுப்பறைகள் 7,856 திறக்கப்பட்டிருக்கின்றது. 31 ஆய்வகங்கள், கழிவறைகள் 20 Units சுற்றுச்சுவர் 852 மீட்டர் இதுவரைக்கும் திறக்கப்பட்டிருக்கிறது. தற்போது பணிகள் நடைபெற்று வருபவை என்று பார்க்கும்பொழுது, ஏறத்தாழ 6,353 வகுப்பறைகள், 351 ஆய்வகங்கள், கழிவறைகள் 357, சுற்றுச்சுவர் 940 மீட்டர் என்று தொடர்ந்து இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எங்களுடைய இலக்கு என்பது 2027 ஆம் ஆண்டிற்குள் அந்த 18,000 வகுப்பறைகள் அதோடு சேர்த்து ஆய்வகங்கள், கழிவறைகள், சுற்றுச்சுவர் என்று முழுமையாக முடிக்கப்படும் என்கின்ற அந்தச் செய்தியை சட்டப்பேரவைத் தலைவர் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு

# கொள்கை மறவராக வாழ்ந்தவர் இரா.மோகன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 11-

**“மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு கொள்கை மறவராக வாழ்ந்தவர் இரா.மோகன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

கோவை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.மோகன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்த முற்றேன். அவரது மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவப் பருவத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட அவர், தன்னுடைய 13 வயதிலேயே நகர்மன்றத் தேர்தலில் கையில் இருவண்ணக் கொடியேந்தி, கழக வேட்பாளர்களுக்காக வீதிவீதியாக வாக்குச் சேகரித்தவர். இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுத்தவர். எமர்ஜென்சிக் காலத்தில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர்கலைஞர்அவர்களது பேரன்பிற்குப் பாத்திரமான அவர், 1980ஆம் ஆண்டு கோவை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராகவும்,1989 ஆம் ஆண்டில் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும் பணியாற்றி, தன்னுடைய தொண்டால் பொதுமக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றார்.

கொள்கை மறவராக வாழ்ந்த இரா.மோகன் அவர்களுக்கு, கடந்த 15.9.2022 அன்று நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில், “அண்ணா விருது” வழங்கி, அவரது பொது வாழ்வைப் போற்றினேன். நான் எப்போது கோவைக்குச் சென்றாலும், இரா.மோகன் அவர்களைச் சந்திக்கத் தவறியதில்லை. இன்று அவர் மறைந்த வேதனை மிகுந்த செய்தியால் கலங்கி நிற்கிறேன்.

இரா. மோகன் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், கழகத் தோழர்கள், கோவை மக்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### நாடாளுமன்ற கழக முன்னாள் உறுப்பினர்

# கோவை இரா.மோகன் மறைவு !

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

கோவை, டிச.11-

கோவை நாடாளுமன்ற கழக முன்னாள் உறுப்பினர் இரா.மோகன் (வயது 81) அவர்கள் நேற்று காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த மோகன் அவர்களின் உடல் மீது மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.



உடன் அமைச்சர் செந்தில்பாலாஜி மற்றும் கழக முன்னணியினர் இருந்தனர்.

கழகத்தில் அவர் ஆற்றிய பணியை கருத்தில் கொண்டு அவருக்கு 2022 ஆம் ஆண்டு நடை பெற்ற கழக முப்பெரும் விழாவில் அவருக்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ‘அண்ணா விருது’ வழங்கி சிறப்பித்தார்.

மறைந்த இரா.மோகன் உடலுக்கு கோவை மாநகர் மாவட்டக் கழகச் செய லாளர் நா.கார்த்திக் உள்ளிட்ட கழக முன்னணியினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

கோவை இரா.மோகன் 13 வயதிலேயே நகர்மன்றத் தேர்தலில் கையில் இருவண்ணக் கொடியேந்தி, கழக வேட்பாளர்களுக்காக வீதிவீதியாக வாக்கு சேகரித்தார்.

1964ஆம் ஆண்டில் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழகத்தில் தீவிரமடையத் தொடங்கியது. போராட்டத்தின்போது, கோவை சலிவன் வீதி தபால் நிலையம் தீக்கிரையாக்கப் பட்டது. அதன் காரணமாக இரா.மோகன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்.

1972ஆம் ஆண்டில் கழக அமைப்புத் தேர்தலில் போட்டியிட்டு, நகர துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார். 1975ஆம் ஆண்டில் தமிழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், பிரதமர் இந்திராகாந்தி நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்தார். நாடு முழுவதிலும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழகத்தில் மட்டும் கைது படலம் நடைபெறவில்லை. கழகத்தின் சார்பில் மாநிலம் முழுவதிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு அவசர நிலைக்கு எதிராக இரா.மோகன் அவர்கள் பேசி வந்தார்.

1975ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கோவையில் நடைபெற்ற கழக மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் அவசர நிலைக்கு எதிராகப் பேசினார்கள். முதலமைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசு, அவசர நிலை அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று உறுதிபடக் கூறினார்.

இதன் விளைவாக தமிழகத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளராக இருந்த தமிழக முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் பலரும் கைது செய்யப்பட்டனர். கோவையில் கழக முன்னணியினருடன் இரா. மோகன் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இரா.மோகன் அவர்கள் சிறையில் இருந்த நேரத்தில், அவரது தந்தையார் மறைவெய்தினார். தந்தையின் இறுதிச் சடங்கு நடத்த ஒருநாள் மட்டும் பரோல் வழங்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்புக்கு எதிரான சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டபோது கைது செய்யப்பட்டார்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கோவை தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று மக்களவை உறுப்பினராகவும் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் சிங்கா நல்லூர் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

ரங்கசாமி, திருமதி தனலட்சுமி அம்மாள் இணையருக்கு மகனாக 3.7.1943 அன்று பிறந்த இரா. மோகன் அவர்கள், சுயமரியாதை முறைப்படி 1972ஆம் ஆண்டில் ஆடி மாதத்தில் திருமதி சுகுணா அம்மையாரை மணந்தார். இவருக்கு இரண்டு மகள்கள். ஒருவர் டி வேலரா, மற்றவர் கவிதா.

இத்தகு சிறப்புக்குரிய கோவை இரா.மோகன் அவர்களின் கழகப் பணியினைப் பாராட்டும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் 15.9.2022 அன்று விருதுநகர், பட்டம்புதூர், அண்ணா நகர் கலைஞர் திடலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “அண்ணா விருது” வழங்கிச் சிறப்பித்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

